இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 04

**EPU4232- இல்லம் - பாடசாலை - சமுதாயத்தொடர்புகள்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 03.03.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. “இல்லம் - பாடசாலைச் சமூகம் தொடர்பு” என்னும் பதத்தினால் நீங்கள் கருதுவது யாது?

2. “பாடசாலை மட்டக் குறிக்கோள்களை அடைவதற்கு அனைத்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோருடன் சிறந்த இடைத்தொடர்பை பேண வேண்டியது அவசியமானதாகும்”.

   நீங்கள் இந்தக் கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை **மூன்று** (03) காரணங்களுடன் நியாயப்படுத்துக.

3. பாடசாலை இல்லப் பங்குடைமையின் **ஐந்து** (05) பரிமாணங்களைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றினைச்** (01) சுருக்கமாக விளக்குக.

4. “நடத்தை விருத்தி” என்னும் பதத்தினை பொருத்தமாக வரையறுக்க.

5. ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக நீங்கள் ஈடுபடக்கூடிய பாடசாலை மட்ட சமூக செயற்றிட்டங்களைப் பட்டியலிடுக.

6. ஆரம்பப் பாடசாலையில் சமூக ஈடுபாட்டுச் செயற்பாடொன்றைச் சுருக்கமாக விபரிக்குக.

7. முன்மாதிரியாக ஆரம்பப்பாடசாலை ஆசிரியரின் வகிபாங்கு என்பதனை சுருக்கமாகக் கலந்துரையாடுக.

8. ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக நீங்கள் சமூகத்திலிருந்து பெறக் கூடிய நன்மைகள் **ஐந்தினைப்** (05) பட்டியலிடுக.

**(05x08 =** 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** பாடசாலையில் பெற்றோரின் ஈடுபாட்டினால் ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர் பெறக் கூடிய நன்மைகள் **மூன்றினை** (03) உதாரணங்களுடன் விளக்குக.

   (10 புள்ளிகள்)

   **ii.** ஆரம்பப் பாடசாலையின் செயற்பாட்டில் பெற்றோர் ஈடுபடுவதால் ஆசிரியரென்ற வகையில் நீங்கள் முகங்கொடுக்கக் கூடிய பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுக.

   (10 புள்ளிகள்)

10. **i.** “பிள்ளைகளின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆசிரியர் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டும்”.
நீங்கள் இந்தக் கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை **மூன்று** (03) காரணங்களுடன் நியாயப்படுத்துக.
**(10 புள்ளிகள்)**

**ii.** பாடசாலைக்கும் குடும்பத்திற்கும் இடையிலான வெற்றிகரமான கூட்டுறவினால் கிடைக்கக் கூடிய நம்பிக்கைகளையும் மனப்பாங்குகளையும் சுருக்கமாக விபரிக்குக.
**(10 புள்ளிகள்)**

11. **i.** பெற்றோருக்கும் பாடசாலைக்குமிடையிலான ஆக்கபூர்வமான வினைத்திறனுள்ள தொடர்பாடலை ஊக்குவிக்க **நான்கு** (04) பொருத்தமான முறைகளை விபரிக்குக.
**(10 புள்ளிகள்)**

**ii.** ஆசிரியரென்ற வகையில் உமது பாடசாலையில் நேரான இல்ல – பாடசாலைச் சமூக இடைத்தொடர்பை எவ்வாறு விருத்தி செய்வீர்கள் என **ஐந்து** (05) உதாரணங்களுடன் விளக்குக.
**(10 புள்ளிகள்)**

12. **i.** “இலங்கையில் பாடசாலை முறைமையினுள் சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்க பல்வேறு உபாயங்கள் காணப்படுகின்றன”.
நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை விமர்சனபூர்வமாக **ஐந்து** (05) காரணங்களை முன்வைத்து விளக்குக.
**(10 புள்ளிகள்)**

**ii.** வினைத்திறனுடன் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தின் பொறுப்புக்களை விபரிக்க.
**(10 புள்ளிகள்)**

13. **பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டினைப் (02) பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**
**i.** ஆரம்பப் பாடசாலையில் சுற்றாடல் செயற்றிட்டம்.
**ii.** ஆரம்பப் பாடசாலையில் பெற்றோர் ஈடுபாட்டின் தாக்கம்.
**iii.** சமுதாயத்தில் கலாசார மற்றும் சமூக முக்கியத்துவம்.
**iv.** இளம் பிள்ளைகளின் உடல் விருத்தி.
**(02x 10= 20 புள்ளிகள்)**